**தலைப்பு 280 – கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் இரண்டாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்புக்கள் மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ்வரும் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் பிரதேச அபிவிருத்தி அமைச்சினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்கள் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்குகள் தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரமாணத்தின் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தில் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வு விடயப் பரப்பு**

---

தலைப்பு 280 – கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 யூலை 04 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர்,

ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தலைப்பு கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.7 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்படத் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| **நிதிப்பிரமாணம் 128 இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிதன்மை** | | **கணக்கீட்டு உத்தியோகத்தரினாலும் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை** | **அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு** |
|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | | |
| 127(8)(அ) | அரசினால் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை மற்றும் அதிகாரம் வழங்கப்படும் நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடு செய்து கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களை கவனத்திற் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகள் வெளிப்படை தன்மையுடன் திட்டமிடப்பட்டு செயற்படுத்துவதாகவும் நடப்பாண்டிற்காக ஆண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்கும் அல்லது நிர்ணயிக்கப்பட்ட இலக்கை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்திருத்தல் | எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் பெற்றுக் கொள்ளப்படாமை | **2.1** |
| 128(1)(ஈ) | பெறுகை, கொடுப்பனவு மற்றும் விநியோகம் என்பவற்றிகாக போதியளவு உள்ளக சோதனை முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதாகவும் அம்முறைமையின் செயற்பாடு | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் குறைபாடுகள் | **2.5** |

| | | | |
|---|---|---|---|
| | காலத்திற்கு காலம் பரீட்சிக்கப்படுகின்றதெனவும் | | |
| 128(1)(ஊ) | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அல்லது திறைசேரியால் கேட்கப்படுகின்ற தகவல்கள், கூற்றுக்கள் சரியான காலநேரத்தில் சமர்ப்பிக்கப்படுவதாகவும் | வருடாந்த செயலாற்றல் அறிக்கை | 2.2 |

**2. செயலாற்றல்**

**2.1 செயற்பாடுகளை நிறைவேற்றாமை**

எதிர்பார்க்கப்பட்ட நலன்களை (outcome) அடைந்து கொள்ளாமை

2017 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில பிரதான செயற்பாடுகளான பதவியணி அங்கத்தவர்களின் இயலளவினை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 2 மில்லியனான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு நிதிஏற்பாட்டை பயன்படுத்த மொத்த பதவியணியினருக்கான நிகழ்ச்சித்திட்டமொன்றும் 15 தனிப்பட்ட நிகழ்ச்சிகளையும் செயற்படுத்த திட்டமிடப்பட்டிருந்தன. எனினும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் ரூபா 2.11 மில்லியன் செலவிடப்பட்டு 27 உத்தியோகத்தர்கள் 16 வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் 11 உத்தியோகத்தர்களு 08 உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் பங்கு பற்றச் செய்யப்பட்டிருந்தனர். அதன் பிரகாரம் திட்டமிடப்பட்ட வகையில் இயலளவு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வறிக்கை 2018 யூன் 05 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**வாகனப் பயன்பாடு**

திணைக்களத்திற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையில் ஒதுக்கப்பட்ட ஈகனங்கள் உட்பட கீழே காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் பிரகாரம் 11 வாகனங்கள் காணப்படுவதுடன் அவ் வாகனங்களில் 96,383 கிலோ மீற்றர் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. அவ்வாகனங்களுக்காக எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கிகளுக்காக ரூபா 1,764,410 தொகையும் சேவை புரிவதற்காக ரூபா 382,081 தொகையும் வாகன திருத்த வேலைகளுக்காக ரூபா 1,039,332 தொகையும் வாகன காப்புறுதிக்காக ரூபா 1,028,606 தொகையுமாக மொத்தம் ரூபா 4,214,429 செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திணைக்களத்தினால் வாகனங்களை ஓட்டத்தில் ஈடுபடுத்தியமைக்காக சாரதி சம்பளம் மற்றும் படிகள் தவிர ஒரு கிலோமீற்றருக்கு ரூபா 43.73 செலவிடப்பட்டிருந்தது.

| வாகனங்களின் வகை | வாகனங்களின் எண்ணிக்கை | பெறுமதி | சாரதி சம்பளம் மற்றும் படிகள் தவிர ஏனைய செலவினம் | ஓட்டத்தில் ஈடுபடுத்தி கிலோமீற்ற | ஓட்டத்தில் ஈடுபடுத்திய கிலோ மீற்றருக்கா கிரயம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | ரூபா |
| கார் | 08 | 35,529,000 | 3,196,672 | 71,332 | 44.81 |
| வான் | 02 | 19,000,000 | 791,628 | 19,375 | 40.86 |
| கப் வண்டி | 01 | 8,500,000 | 226,129 | 5,676 | 39.84 |

**2.4 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளை பயன்படுத்துதல்.**

2017 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த 04 ஆண்டு காலப்பகுதியில் திணைக்களத்திற்கு மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி ஏற்பாடு பயன்பாடு மற்றும் சேமிப்புக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 2014 | மீண்டெழுபவை | 62.31 | 61.70 | 0.62 | 1 |
| | மூலதனம் | 11.74 | 9.74 | 1.98 | 17 |
| | மொத்தம் | 74.05 | 71.44 | 2.60 | 4 |
| 2015 | மீண்டெழுபவை | 78.68 | 78.63 | 0.05 | 0.07 |
| | மூலதனம் | 21.94 | 13.15 | 8.79 | 40 |
| | மொத்தம் | 100.62 | 91.78 | 8.84 | 9 |
| 2016 | மீண்டெழுபவை | 91.19 | 87.84 | 3.34 | 4 |
| | மூலதனம் | 13.99 | 12.85 | 1.15 | 8 |
| | மொத்தம் | 105.18 | 100.69 | 4.49 | 4 |
| 2017 | மீண்டெழுபவை | 144.87 | 131.14 | 13.73 | 9 |
| | மூலதனம் | 110.87 | 85.79 | 25.09 | 23 |
| | மொத்தம் | 255.74 | 216.93 | 38.82 | 15 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2017 யூன் மாதம் 09 ஆந் திகதி 2022/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட அபிவிருத்தி செயற்பாடுகள் அமைச்சிற்காக ரூபா 120.31 மில்லியனான நிதிஏற்பாடு இத்திணைக்களத்தின் செலவினத் தலைப்பின் கீழ் செலவிடப்பட்டிருந்தது.

**2.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சிற்குரிய 14701 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 6.0 | 5.2 | 3.2 | 3.3 | 20.0 | 13.6 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த ரூபா 139,921 தொகையான கடன் மீதி 02 ஆண்டுகள் 3 வரையிலான கால வீச்சிலிருந்து கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்த நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

**2.6 உள்ளக கட்டுப்பாடும் நிர்வாகமும்**

**உள்ளகக் கணக்காய்வு**

நிதிப் பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட தமது கடமை மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக கணக்கீட்டு உத்தியோகத்தரால் தமது திணைக்களங்களில் உள்ளகக கணக்காய்வு பிரிவொன்று தாபிக்கப்பட வேண்டுமென நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் கவனத்தில் கொள்ளப்பட்டிருந்தது. எனினும் இந்த திணைக்களத்தினால் உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.7 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்**

மேற்படி 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுதற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான, வெற்றிடமான மற்றும் மிகைப் பதவியணி தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்காக அமைச்சினால் ஆளணி வேதன செலவின தொகுதிக்காக ரூபா 46.14

மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நபரொருவருக்கான செலவினம் ரூபா 0.72 மில்லியனாக இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 36 | 24 | 12 |
| (ii) | மூன்றாம் நிலை | 4 | 2 | 2 |
| (iii) | இரண்டாம் நிலை | 47 | 23 | 24 |
| (iv) | ஆரம்ப நிலை | 21 | 15 | 6 |
| (v) | அமைய ஒப்பந்த/ | -------- | -------- | -------- |
| | மொத்தம் | 108 | 64 | 44 |

இவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் எண்ணிக்கையில் 41 வெற்றிடங்கள் காணப்பட்டமை நிறுவகத்தின் செயற்பாட்டிற்கு பாதகமாக தாக்கமளிக்கலாம் என ஆராய்ந்து அப்பதவிகளை நிரப்புவதற்கும் அவ்வாறான தாக்கமொன்று இல்லெயெனின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை திருத்தம் செய்வதற்கு காலம் செலுத்தப்பட்டிருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது.